தினகரன்

## கம்பம் பள்ளத்தாக்கில் முதல் போக சாகுபடிக்காக நெல் நடவுப்பணி துவக்கம்

பதிவு செய்த நேரம்:2012-06-30 12:29:41

கம்பம்: கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் முதல் போக நெல் நடவுப்பணி நேற்று முதல் துவங்கியது. கம்பம் பள்ளத்தாக்கு பகுதியான காமயகவுண்டன்பட்டி, நாரயணத்தேவன்பட்டி, சுருளிப்பட்டி, உள்ளிட்ட பகுதிகளில் முல்லை பெரியாறு தண்ணீரை நம்பி இரு போக நெல் சாகுபடி நடந்து வருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன் 2ம் போக அறுவடைப்பணி முடிவடைந்தது. இந்நிலையில் முல்லை பெரியாறில் பாசனத்திற்காக திறந்து விடப்படும் தண்ணீர் நிறுத்தப்பட்டது. இதனால் விவசாயிகள் கோடைகால பயிர்களான உளுந்து, தட்டை பயிர்களை விதைத்தனர்.

கடந்த 25 ம்தேதி பாசனத்திற்காக முல்லை பெரியாறில் 200 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. கம்பம், சுருளிப்பட்டி, நாரயணத்தேவன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முதல் முதல் போக நெல் நடவுப்பணிகள் துவங்கியுள்ளது.

இதுகுறித்து விவசாய சங்க தலைவர் ஓ.ஆர். நாராயணன் கூறுகையில், ‘தொடர்ந்து ஆண்டுக்காண்டு உர விலை அதிகரித்து வருகிறது. முதல் போக நெல் நடவுப்பணிக்கு தண்ணீர் பற்றாக்குறையில்லாமல் சமாளிக்க விவசாயிகள் பல லட்சம் செலவு செய்து வீரப்பநாயக்கர் குளம், ஒட்டுக்குளம், கொடம்படி குளம், கட்டத்தியம்மன் குளம், மற்றும் உத்தமுத்து கால்வாயில் சுமார் 13 கிலோ மீட்டர் தூரத்திற்கு சொந்த செலவில் தூர்வாரியுள்ளோம். மேலும் நடவுக்கு முன்பாக டி.ஏ.பி. மற்றும் பாக்டம்பாஸ் அடியுரமாக கட்டாயம் இட வேண்டும். அப்போது தான் பயிர்கள் நன்கு விளையும். தற்போது டி.ஏ.பி. விலை மூடை ஆயிரம் ரூபாயை தாண்டியுள்ளது. அரசு உர விலையை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என்றார்.

## விவசாயிகளுக்கு செய்முறை பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-06-30 12:10:30

ஸ்ரீவைகுண்டம்: ஸ்ரீவை பகுதியில் பேரின்பபுரம், பேரூர், சிவகளை, பொன்னன்குறிச்சி, புதுக்குடி, பத்மநாபமங்கலம் உள்ளிட்ட ஊர்களில் 30 நாட்களுக்கு விவசாயிகளுக்கு வாழை செய்முறை விளக்க பயிற்சி முகாம் நடைபெறுகிறது. புதுக்குடியில் நடைபெற்ற பயிற்சியின் போது விவசாயிகளுக்கு கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி மாணவிகள் ஆயிஷா, அபிராமி,

கலைவாணி, சந்தியாவள்ளி, சிவரஞ்சனி, சியாமளா தேவி, வினோதினி ஆகியோர் விளக்கம் அளித்தனர்.

## நவீன தொழில்நுட்பத்தால் லாபமடையும் பட்டு வளர்ப்பு கலெக்டர் ராஜாராமன் தகவல்

பதிவு செய்த நேரம்:2012-06-29 12:09:53

சிவகங்கை: நவீன தொழில்நுட்பத்தால் பட்டு வளர்ப்பு லாபகரமான தொழிலாக மாறியுள்ளது என கலெக்டர் ராஜாராமன் தெரிவித்தார்.

பட்டு வளர்ச்சித்துறை மூலம் பட்டு வளர்ப்பை அதிகரிப்பது தொடர்பான கருத்தரங்கு ஒக்கூரில் நடந்தது. கலெக்டர் ராஜா ராமன் தலைமை வகித்து பேசியதாவது:

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு பட்டு வளர்ப்பு தொழில் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டது. தொழில்நுட்ப வசதி இல்லாததாலும், மார்க்கெட்டிங் செய்ய முடியாததாலும் பட்டு வளர்ப்பு தொழில் குறைய தொடங்கியது. தற்போது சிவகங்கை மாவட்டத்தில் இத் தொழிலை 42 விவசாயிகள் மட்டுமே மேற்கொண்டு வருகின்றனர்.

பட்டு வளர்ப்புக்கு ஏற்ற பகுதியாக சிவகங்கை மா வட்டம் உள்ளது. தற்போது பட்டு வளர்ச்சித்துறை மூலம் நவீன தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் பட்டு வளர்ப்பு லாபகர மான தொழிலாக மாறியுள் ளது. 3ம் கட்ட புழுக்களே விவசாயிகளுக்கு நேரடியாக வளர்க்க கொடுக்கப்படுகின்றன.

ஆத்மா திட்டம் மூலம் 113 விவசாயிகளை தேர்ந்தெடுக்கப்பட்டு பட்டு வளர்ப்பு மையங்களுக்கு அழைத்து சென்று பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 66 விவசாயிகள் உடனடியாக பட்டுப்புழு வளர்க்க முன்வந்துள்ளனர். ஒரு விவசாயி குறைந்தது 2 ஏக்கரில் பட்டு வளர்த்தால் நல்ல லாபம் அடையலாம்.

ஒரு வருடத்திற்கு ரூ.3 லட்சம் வரை லாபம் கிடைக்கும். மல்பரி செடி வளர்ப்பதற்கு அரசு பல்வேறு மானியங்களை வழங்குகிறது. மேலும் பட்டுப்புழு வளர்ப்பதற்கு வங்கிகள் கடன் வழங்குகின் றன. பட்டு வளர்ச்சித்துறை அலுவலகத்தில் தினமும் விலை விபர பட்டியல் வெளியிடப்படுவதால், விவசாயிகள் முழுமையான விபரங்களை தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு பேசினார்.விவசாயிகளுக்கு மானிய தொகையை கலெக்டர் வழங்கினார். விஞ்ஞானிகள் டேனியல், மோகன், புனிதவதி கருத்துரை வழங்கினர். ஒன்றிய குழுத் தலைவர் பாஸ்கரன், ஊராட்சித் தலைவர் ராஜா, பட்டு வளர்ச்சித்துறை மண்டல துணை இயக்குநர் முருகன், உதவி இயக்குநர் நடராஜன், உதவி ஆய்வாளர் சந்திரசேகரன், புதுவாழ்வு திட்ட அலுவலர் போஸ், முன்

னோடி வங்கி மேலாளர் பெருமாள், வங்கி அலுவலர் அனந்தராமன், ஐ.ஓ.பி. கடன் ஆலோசகர் கிருஷ் ணன் கலந்து கொண்டனர்.